செய்தி வெளியீடு எண்:747 நாள்: 05.11.2017

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.11.2017) சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் கடந்த இரண்டு நாட்களில் தொடங்கப்பட்டு நடைபெற்று வரும் 401 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் நடமாடும் மருத்துவக் குழுக்களை தொடர்ந்து, கூடுதலாக 150 நடமாடும் சிறப்பு மழைக்கால மருத்துவக் குழுக்கள், 25 நிலவேம்பு குடிநீர் வழங்கும் நடமாடும் வாகனங்கள் மற்றும் குடிநீரில் குளோரின் பரிசோதனை செய்யும் 25 பொது சுகாதாரக் குழுக்கள், என மொத்தம் 200 மழைக்கால சிறப்பு மருத்துவ வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது பகுதிகளுக்கே சென்று சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு மருத்துவக் குழுவிற்கும் பிரத்யேகமாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் மருத்துவ வாகனத்தில், மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் பணிபுரிவார்கள். மேலும், இந்த நடமாடும் மருத்துவ வாகனத்தில் இரத்த அழுத்த பரிசோதனைக் கருவி, காய்ச்சலின் அளவை கணக்கிடும் தெர்மாமீட்டர் கருவி, மருந்துகள், மாத்திரைகள், டானிக்குகள், களிம்புகள் ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் மருத்துவ முகாம்கள் பகுதி வாரியாக பிரிந்து சென்று மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு அவர்களின் பகுதிகளுக்கே சென்று காலை 8.00 மணி முதல் மாலை வரை தொடர்ந்து மருத்துவ சேவையை வழங்கும்.

கடந்த 3.11.2017 அன்று வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 295 சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 4.11.2017 அன்று சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு 106 நடமாடும் மழைக்கால சிறப்பு மருத்துவக் குழுக்கள் மூலம் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. அத்துடன், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட தண்ணீர் மூலம் பரவும் தொற்றுநோய்களும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. குடிநீரில் குளோரின் கலந்து விநியோகிக்கப்படுவதை மருத்துவம் மற்றும் பொது சுகாதார குழுக்கள் உறுதி செய்கின்றன.

தற்போது, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 102 மருத்துவக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், டேங்கர் லாரிகளில் வரும் குடிநீர் கண்காணிக்கப்படுவதுடன், உணவு ஆய்வு மற்றும் குடிநீர் பரிசோதனைக்காக 90 குழுக்கள் இந்த 6 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. பொதுமக்களின் தேவைக்கேற்ப இம்முகாம்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது:

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும், தலைமைச் செயலாளருக்கும், இங்கு வருகை தந்துள்ள மருத்துவ துறை உயர் அதிகாரிகளுக்கும், இந்த மருத்துவ முகாமில் ஈடுபட்டு பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும். இங்கு வருகை தந்துள்ள பத்திரிக்கையாளர் மற்றும் ஊடக நண்பர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனுக்குடன் அந்த பகுதியிலேயே சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு 401 முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், 200 மருத்துவக் குழுக்களோடு நடமாடும் மருத்துவக் குழு இன்று அனுப்பி வைக்கப்படுகிறது. ஆக மொத்தம் 601 மருத்துவக் குழுக்கள் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளிக்கப்படுகின்ற வகையில் அரசால் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த மழைக்காலங்களில் ஏற்படுகின்ற நோய்களிலிருந்து விடுபடுவதற்கும், உடனுக்குடன் அந்த பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய நோக்கத்தில் இந்த மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம், நடமாடும் மருத்துவ வசதி மக்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் ஏதாவது நோய் அறிகுறி இருந்தால், அந்த பகுதியில் உள்ள சிறப்பு மருத்துவ முகாமிற்கு உடனடியாக சென்று மருத்துவரை அணுகி மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். இங்கே பத்திரிக்கையாளர் மற்றும் ஊடக நண்பர்கள் வருகை தந்துள்ளீர்கள். எந்தளவுக்கு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை நீங்கள் பார்த்து உங்களது ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் தெரிந்து கொண்டு அப்பகுதிக்கு சென்று மருத்துவ முகாமை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்வார்கள். அதோடு சித்த மருத்துவர்களும் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு மருத்துவத் துறையில் இருக்கின்ற மருத்துவர்களும் இங்கே பணிபுரிய வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மழைக்காலங்களில் தொற்றுநோய் ஏற்படாமல் இருப்பதற்காக அரசு முன்னெச்சரிக்கையாக எடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமில்லாமல், தண்ணீரில் குளோரின் எந்த

அளவிற்கு இருக்கிறது என்பதை கண்டறிவதற்கும் அதற்கு தகுந்த உபகரணங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீரில் குளோரின் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை கண்டறிந்து மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே பொதுமக்கள் சுகாதாரமாக இருப்பதற்காக பிளீச்சிங் பவுடர் நடமாடும் குழுவிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தந்தப் பகுதி மக்களுக்கு அவர்கள் விநியோகம் செய்வார்கள். அரசைப் பொறுத்த வரைக்கும் மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கக் கூடாது என்பதற்காக இப்படிப்பட்ட மழைக்கால மருத்துவ சிறப்பு முகாமை ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மருத்துவ முகாமில் பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் அவர்களுக்கு துணையாக இருப்பவர்களுக்கும், சேவை மனப்பான்மையோடு பணியாற்றுகின்ற அனைவருக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ.சத்யகோபால், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் / அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மோகன் பியாரே, இ.ஆ.ப., தேசிய ஊரக நலவாழ்வு சங்கத்தின் குழும இயக்குநர் திரு.தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் உமாநாத், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் திருமதி உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் அ. எட்வின் ஜோ, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கு. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கூடுதல் இயக்குநர் (ஆய்வு) டாக்டர் பி. பானு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் எம்.ஆர். இன்பசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 5.11.2017**